<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

<u>அசல் வழக்கு எண்.</u> 250/2019

இன்று 2026 ம் ஆண்டு ஜூலை 09 நாள் வியாழன் கிழமை இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின்) திருமதி.A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : ருக்னுதீன்

தந்தை பெயர் : அப்துல்ரஷீத்

வயது :

தொழில் :

---

<u>முதல் விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பி.வா.சா.ஆ.2 | எனது ஆதார் அடையாள அட்டை | அசலோடு ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. |

(முதல் விசாரணை முடிக்கப்பட்டது)

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை, கோமதி அழைத்ததனின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது கவுந்தப்பாடியில் டவுனில் குடியிருக்கிறேன். கவுந்தப்பாடியில் இருந்து

பெருந்தலையூர் எவ்வளவு துாரம் என்றால் 5 கி.மீ. துாரம். தற்போது நான் குடியிருக்கும் கதவு எண் என்ன என்றால் 76, பழனிச்சாமி வீதி, கவுந்தப்பாடி. நான் மேற்படி முகவரியில் 27 வருடமாக குடியிருக்கிறேன். நான் தற்போது பெருந்தலையூரில் குடியில்லை. நான் சொல்லும் உயில் 05.07.2011ம் தேதி எழுதப்பட்டது. இந்த தேதி எனக்கு யார் சொன்னார்கள் என்றால் நான் உயில் எழுதும்போது அருகில் இருந்து பார்த்ததால் சொல்கிறேன். இவ்வளவு ஆண்டு ஞாபகம் வைத்து சொல்கிறேன் என்றால் எனது அலுவலகமும், பத்திர எழுத்தர் அலுவகமும் அருகருகே இருந்தது அதுனால் பார்த்தேன்.

2. நான் சொந்த வாகனம் வைத்துள்ளேன். காரா அல்லது ஸ்கூட்டரா என்றால் ஸ்கூட்டர். ஸ்கூட்டருக்கு இந்த ஆண்டு இன்சூரன்ஸ் போட்டுவிட்டேனா என்றால் 02.04.2026ம் தேதியன்று போட்டேன். எந்த தேதியில் ஸ்கூட்டரை வாங்கினேன் என்றால் 12.01.2019ல் வாங்கினேன். மேற்படி தேதிக்கு உண்டான ஆவணத்தை என்னால் காட்ட முடியும் என்றால் எங்கு வைத்துள்ளேன் என்று தெரியாது அதனால் முடியாது. எனக்கு இரண்டு மகன்கள்.

3. பத்திர எழுத்தர் பெயர் தங்கவேல். பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு அன்று நான் எத்தினை மணிக்கு சென்றேன் என்றால் காலை சுமார் 11.00 அல்லது 11.30 மணி இருக்கும். நான் செல்லும் போது அங்கு தங்கவேலும், எனது பக்கத்து ஊர்காரர், அம்மாசை நாடாரும் அங்கு இருந்தார்கள். அவர்களை பார்த்துவிட்டு நான் எனது அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். எத்தினை மணிக்கு அவர்களை பார்த்தேன் என்றால் 11.30 மணிக்கு பார்த்தேன். அதன் பிறகு தான் பத்திரத்தை தயார் செய்தார்கள் என்றால் இல்லை. அதற்கு முன்பே

தயார் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். யார் விபரம் சொல்லி யாரால் பத்திரம் தயாரிக்கப்பட்டது என்பதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

4. உயிலை தயாரிப்பதற்கு முன்பு டிராப்ட் உயில் தயாரிக்கப்பட்டதா என்பது எனக்கு தெரியாது. நான் எத்தினை மணிக்கு உயிலில் கையொப்பம் செய்தேன் என்றால் சுமார் 12.00 அல்லது 01.00 மணிக்கு தங்கவேல் அலுவலகத்தில் வைத்து உயிலில் கையொப்பம் செய்தேன். வேறு நபர் கையொப்பம் செய்ததை நான் பார்க்கவில்லை என்றால் எனக்கு பிறகு பெருமாள் என்பவர் இரண்டாவது சாட்சி கையொப்பம் செய்தார். என்னை கையொப்பம் செய்வதற்கு யார் அழைத்தார்கள் என்றால் தங்கவேலும், அம்மாசை நாடாரும் எனது உள்ளூர்காரர்கள் என்பதால் அழைத்தார்கள். எப்போது அழைத்தார்கள் என்றால் உயிலை எழுதிய பிறகு அழைத்தார்கள்.

5. என்னையும், பெருமாளையும் தவிறு வேறு யார் கையொப்பம் செய்த விபரம் எனக்கு தெரியாது என்றால் முதலில் அம்மாசை நாடார் கையொப்பம் செய்தார், அதன் பிறகு நானும், அதன் பிறகு பெருமாளும் கையொப்பம் செய்தார். அதன் பிறகு பத்திர எழுத்தர் கையொப்பம் செய்தார். அம்மாசை நாடார் கையொப்பம் செய்தபிறகு தான் என்னை கையொப்பம் செய்ய அழைத்தார்களா என்றால் ஆமாம். அம்மாசை நாடார் தான் வந்து அழைத்தார். அம்மாசை நாடார் வந்து என்னை அழைத்தபிறகு நான் எனது அலுவலகத்தில் இருந்து எழுந்து சென்றேனா என்றால் ஆமாம். அதன் பிறகு அந்த உயிலை எங்கு கொண்டுசென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் பதிவு அலுவலகத்திற்கு கொண்டு சென்றார்கள். பதிவு அலுவலகத்திற்கு நான் செல்லவில்லை.

6. உயில் எவ்வளவு பக்கம் இருந்தது என்றால் ஞாபகம் இல்லை. அது பாண்டு பத்திரத்தில் அடிக்கப்பட்டு இருந்தது, எவ்வளவு ரூபாய் பாண்டு பத்திரத்தில் அடிக்கப்பட்டு இருந்து என்று தெரியாது. யார் அதை வாங்கி வந்தார்கள் என்று தெரியாது. கோமதியை பத்திரம் எழுதும்போது தான் பார்த்தேன். நானும் கோமதியும் ஒரே வண்டியில் வந்தோமா என்றால் இல்லை, தனித்தனியாக வந்தோம். நான் எனது இன்சூரன்ஸ் மற்றும் ஸ்கூட்டர் ஆவணத்தின் தேதியை பொய்யாக சொன்னதால் தான் அதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்யமுடியவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. கோமதி எனக்கு நீண்ட நாள் பழக்கப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த உயில் திருப்பூரில் இரண்டும், பொன்னாச்சிபுதூரில் ஒரு சொத்தும் எழுதப்பட்டது.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.09 17:02:10 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.